*1*

## யெரொபெயாம் (1)

# எரிந்து அணைந்துபோன உதய நட்சத்திரம்

*வேதபாடப் பகுதி: 1 இராஜாக்கள் 11:26-39; 12:1-14:20*

*சில மனிதர்கள் நடத்துனர்களாய் இருக்கவே பிறந்தவர்களாகக் காணப்படுகின்றனர். அவர்கள் ஏதாவது ஒரு வகை குழுவிற்கு நியமிக்கப் பட்டால் அல்லது குழுவில் ஏதாவது ஒரு வகையில் இடப்பட்டால், அவர்கள் அதன் தலைவராகின்றனர் அல்லது அதை வழிநடத்துகின்றனர், அவ்வாறு செய்ய அவர்கள் தேர்ந்தெடுக்கப்பட்டாலும் இல்லாவிட்டாலும் அதைச் செய்துவிடுகின்றனர். அவர்கள் எப்போதுமே "பொறுப்பில் இருப்பவர்" என்ற வகையில் கூட்டத்தில் இருந்து தனித்து மேலெழு கின்றனர். எடுத்துக்காட்டாக, சீமோன் பேதுரு என்பவர் அப்போஸ் தலர்களின் கூட்டத்தில் எப்போதுமே முதலில் பேசுபவராக, ஒரு பதில் அளிப்பவராக, அல்லது ஒரு முடிவை அறிவிப்பவராக இருந்தார். அவர் அப்படிப்பட்ட வகையான மனிதராக மாத்திரம் இருந்தார். நாம் சிலவேளைகளில் கூறுகின்றபடி, "அவர் செய்கையின் மனிதராயிருந்தார்." சிலவிஷயங்களைக் கூறுதல் அல்லது செய்தல் என்பது தவறாயிருந்த போதிலும், அவர் சில விஷயங்களைக் கூறினார் அல்லது சில விஷயங்களைச் செய்தார். அவர் கூட்டத்தின் முன்னணியில் இருக்க வேண்டியிருந்தது. அவர் நடத்த வேண்டியிருந்தது.*

*யெரொபெயாம் இவ்வகையான மனிதராய் இருந்திருக்க வேண்டும். அவர் மற்றவர்களை நன்கு வழிநடத்த அவசியமான பண்புகளைக் கொண்டிருந்தார். இவற்றில் மூன்று பண்புகளைப் பற்றி நாம் இந்த பாடத்தில் படிப்போம். அவர் ஒரே ஒரு விஷயத்தை, ஆனால் பிரதானமான விஷயத்தைக் கொண்டிருக்கத் தவறிப்போனார்: அது நீதியான நேர்மை என்பதாகும். என்ன ஒரு பரிதாபம்! அவர் வாழ்க்கைப் பண்புகளில், மூன்று கழித்தல் ஒன்று என்பது பூஜ்யத்திற்குச் சமமாகும் என்று கண்டறிந்தார். நீதி யான நேர்மையின்றி, அவர் ஒன்றுமற்றவராயிருந்தார். அவர் விரைவிலேயே அணைந்துபோன ஒரு உதய நட்சத்திரத்தின் சித்திரமாய் இருக்கின்றார்.*

*அவரது வாழ்வின் வரலாற்றில் முதல் ஒரு சில பக்கங்களை மிக நெருக்கமாகக் கண்ணோக்குங்கள். சரியான பண்புகள் ஒவ்வொன்றையும் நாம் கொண்டிருக்கப் பிரயாசப்படுவது பற்றி அவர் நமக்கு எச்சரிக்கையாய் இருக்க அனுமதிப்போம்.*

# உயர்ந்த நோக்கம் கொண்ட
# உறுதியான நம்பிக்கை

*... சேரேதா ஊரிலுள்ள எப்பிராயீம் மனுஷனாகிய நேபாத்தின் குமாரன் யெரொபெயாம் என்னும் சாலொமோனின் ஊழியக்காரனும் ... அவனுடைய தாய் செரூகாள் என்னும் பேருள்ள ஒரு விதவை ... (11:26).*

*உறுதிப்பாடு என்பது யெரொபெயாம் கொண்டிருந்த பாராட்டப் படக்கூடிய முதல் பண்பாயிருந்தது. அவர் எப்பிராயீம் கோத்திரத்தைச் சேர்ந்த, ஒரு உயர்ந்த நோக்கம் கொண்ட, முன்னேறிச் செல்லுகின்ற, உறுதியான நம்பிக்கை கொண்ட இளைஞராயிருந்தார். ஒருவேளை அவரது உறுதியான நம்பிக்கையில் கொஞ்சம், அவர் சார்ந்திருந்த வம்சவழி மற்றும் இணைவுகள் ஆகியவற்றில் இருந்து வந்திருக்கலாம். எப்பிராயீம் என்பது ஒரு கர்வமிக்க மற்றும் வரலாற்றுரீதியான கோத்திர மாய் இருந்தது. அவர்கள், இஸ்ரவேலின் மாபெரும் தலைவர்களில் ஒருவரான யோசுவா தங்கள் கோத்திரத்தில் இருந்து வந்தார் என்பதைப் பற்றிப் பெருமை பாராட்ட முடிந்தது. மற்றும், அவர்கள் ஆசரிப்புக்கூடாரம் முதன்முதலில் வைக்கப்பட்ட இடமான சீலோ என்பது, தங்களின் சொந்தபூமியாய் இருந்தது என்றும் கூறமுடிந்தது. அவர்கள் நீண்டதொரு விவரிப்பான வரலாற்றைக் கொண்டிருந்தனர், மற்றும் அவர்கள் தங்களுக்கென்று எதிர்பார்த்த விஷயங்கள் மிகவும் உயர்வானவைகளாய் இருந்தன. இவ்விதமாக அவர்கள் தங்களுக்கு ஒதுக்கப்பட்ட காணியாட்சிப் பகுதிகள் தங்கள் மேன்மைக்குக் கீழானவைகளாயும் தங்கள் தேவைக்குப் போதாதவைகளாயும் இருந்தன என்று கருதினர். அவர்களுக்கு யோசுவா, அவர்களின் எல்லைப்பகுதிகளை முன்வைத்தபோது அவர்கள், ‘‘கர்த்தர் எங்களை இதுவரைக்கும் ஆசீர்வதித்துவந்ததினால், நாங்கள் ஜனம் பெருத்தவர்களாயிருக்கிறோம்; நீர் எங்களுக்குச் சுதந்தரமாக ஒரே வீதத்தையும் ஒரே பங்கையும் கொடுத்தது என்ன?” (யோசுவா 17:14) என்ற கடினமான வார்த்தைகளினால் திட்டினார்கள்.*

*யெரொபெயாமின் உறுதியான நம்பிக்கை எங்கிருந்து உருவாகி யிருப்பினும், அது அவரது இல்ல வாழ்வின் பேரழிவிலும் உயிர்பிழைத்தி ருந்தது. அவரது தொடக்ககால வாழ்வின் ஒரு காலகட்டத்தில், சாலொ மோனின் பணிக்குழுவில் அதிகாரியாய் இருந்த, அவரது தந்தையார், இறந்துபோனார். பெற்றோர்களில் ஒருவரை இழத்தல் என்பது ஒரு இளைஞனுக்கு பூமியே குலுங்கும் அனுபவமாகவும் திகைப்பு மற்றும் உறுதியற்றநிலை ஆகியவற்றின் தழும்புத் திசுவை விட்டுச்செல்வதாகவும் இருக்கக்கூடும். நம்மால் கூறமுடிகிறவரையில், இது யெரொபெயாமின் விஷயமாயிருக்கவில்லை. பறிகொடுத்தல் என்பது அவரது ஆவியை முறித்துப் போடவில்லை. வேதவசனத்தில் நாம் அவரை முதன் முதலாகக் காணுகிறபோது, அவர் தைரியமானவராக, வீரமிக்கவராக, மற்றும்*

வஞ்சனையற்றவராக இருக்கின்றார்.

உறுதியான நம்பிக்கை [தன்னம்பிக்கை] என்பது அவசியமான பண்பாய் இருக்கிறது. அது கர்வமாக திரும்பாதிருந்தால், அது ஒரு சொத்தாய் இருக்க முடியும். உறுதியான நம்பிக்கை கொண்டுள்ள ஒரு மனிதர் பாராட்டப்பட வேண்டியவராக இருக்கின்றார்; மேட்டிமை கொண்ட திறமையான ஒரு மனிதர் ஒவ்வொருவராலும் வெறுத்து ஒதுக்கப்படுவார். உறுதியான நம்பிக்கை, முயற்சி செய்பவர்களுக்கு தைரியம் தருகிறது; மேட்டிமை அல்லது செருக்குள்ள ஆவியானது ஒருவரை சிறுமைப்படுத்தும் வீழ்ச்சிக்குச் செலுத்தி அமைக்கிறது.

## பாராட்டத்தக்க திறமை

*யெரொபெயாம் என்பவன் பராக்கிரமசாலியாயிருந்தான்; அவன் காரியசமர்த்தனான வாலிபன் என்று சாலொமோன் கண்டு, யோசேப்பு வம்சத்தாரின் காரியத்தையெல்லாம் அவன் விசாரிப்புக்கு ஒப்புவித்தான் (11:28).*

திறமை என்பது யெரொபெயாமிடத்தில் இருந்த விரும்பத்தக்க இரண்டாவது பண்பாகும். அவர் காரியம் செய்பவராக இருந்தது மட்டுமின்றி, ஒரு காரியசமர்த்தராகவும் இருந்தார். அவர் மற்றவர்கள் கவனிக்கக்கூடிய வகையில் திறமை கொண்டிருந்தார். அவரது ஊக்கமும் உழைக்கும் வழக்கங்களும் கொண்டு வந்த நற்பெயர் அவருடைய மேலதிகாரிகளுக்கு மாத்திரமல்ல, ராஜாவுக்கும்கூட உயர்ந்தது. பணித்தளத்தில் அவரது மேன்மையின் அடிப்படையில், அவருக்கு சாலொமோனின் கீழ் ஒரு அதிகாரமுள்ள பதவி தரப்பட்டது; அவர் யோசேப்பு வம்சத்தாரின் காரியத்தையெல்லாம் விசாரிக்கும் பணிக்குழுவை மேற்பார்வை செய்யும் பணியாற்ற நியமிக்கப்பட்டார்.

திறமை என்பதும் பாராட்டப்படத் தக்கதாகவே இருக்கிறது. அது இன்றி வழிநடத்த முயற்சிப்பவருடைய நிலை பரிதாபமானதாக உள்ளது. திறமை என்பது தனக்குச் சொந்தமாகப் பண்பு எதையும் கொண்டிருப் பதில்லை என்பதை நாம் நினைவில் வைப்போமாக. அது பணத்தைப் போன்றது. அது தன்னைக் கொண்டுள்ள கரத்தில் இருந்து தனக்குப் பண்பைப் பெற்றுக்கொள்கிறது. திறமை என்பது நேர்மையான இருதயத் தினால் வழிநடத்தப்படும்போது மாத்திரமே மதிப்புள்ளதாய் இருக்கிறது.

## ஈர்க்கத்தக்க ஆளுமைத்தன்மை

*யெரொபெயாம் திரும்பிவந்தான் என்று இஸ்ரவேலருக்கெல்லாம் கேள்வியானபோது, அவனைச் சபையினிடத்தில் அழைத்தனுப்பி, அவனைச் சமஸ்த இஸ்ரவேலின்மேலும் ராஜாவாக்கினார்கள்; ... (12:20).*

யெரொபெயாமின் மூன்றாவது பண்பு, "பிறரை ஆட்படுத்தும் வலிமையுள்ள தனிமனிதப் பண்பு," அல்லது "கவர்ந்திழுக்கும் ஆளுமைத் தன்மை" என்று அழைக்கப்பட்டுள்ளது. அவர் மக்கள் பின்பற்ற விரும்பும் வகையிலான மனிதராயிருந்தார். மக்கள் அவரில் நம்பிக்கை கொண்டிருந் தனர். அவர் பேசியபோது, மக்கள் கவனித்துக்கேட்டனர். அவர்களுக்கு ஒரு அரசன் தேவைப்பட்டபோது, அவரே அவர்களின் முதல் தெரிவாக இருந்தார்.

கவர்ந்திழுக்கும் ஆளுமைத்தன்மை என்பது நிச்சயமாகவே ஒரு ஆசீர்வாதமாகும். எதிர்த்துத் தள்ளுகிற ஆவியினிமித்தம் ஒரு வேலை தோல்வியடைவதை எவரும் விரும்ப மாட்டார்கள். மக்கள் ஒரு முயற்சியில் அதன் மதிப்பைக் காணாதிருப்பதால் அதைப் புறக்கணிக்கலாம். சரிதான். அதுவும் போதுமான காரணம்தான். மக்கள் ஒரு வேலைக்குப் பணத் தட்டுப்பாடு அல்லது சக்தியின்மை ஏற்பட்டதன் நிமித்தம் அதைச் செய்யா திருக்கலாம். அதுவும்கூட, போதுமான, காரணமாகவே உள்ளது - ஆனால் அவர்கள் ஒரு நல்ல வேலையை முன்மொழிபவரின் ஆளுமைத்தன்மையை வெறுப்பதனிமித்தம், அவ்வேலையைச் செய்ய மறுப்பார்கள் என்றால், அது துன்பம் நிறைந்ததாக இருக்கும். அது அந்த முயற்சியைத் தோல்வியடையச் செய்யும், ஆனால் அந்த வேலையைப் பற்றிய உண்மையினால் அல்ல, அது கொண்டு வரப்படும்போது அதைப் பொதிந்திருந்த காகிதத்தின் காரணமாகவே.

பிரியமான ஆளுமைத்தன்மையானது சத்தியம் கேள்விப்படுவதைப் பெற உதவக்கூடும். ஆனாலும், மக்கள் ஆளுமைத்தன்மையினால் மாத்திரம் இணங்கவைக்கப்படுதல் என்பது அவர்களுக்கு நல்லதல்ல; நாம் சத்தியமானது ஒரு பிரியமான ஆளுமைத்தன்மையின் மூலம் முன்வைக்கப் படவும், அது சத்தியத்தை முன்வைப்பவரினிமித்தமல்ல, ஆனால் அதன் உண்மைத்தன்மையினிமித்தம் ஏற்றுக்கொள்ளப்படவும் விரும்புகின்றோம். இருப்பினும், மற்ற காரணிகள் சமமாயிருக்கையில், ஒரு நல்ல ஆளுமைத் தன்மை சத்தியத்தை முன்வைக்க உதவுவதாயிருக்கும்.

யெரொபெயாம் நாம் யாவரும் பாராட்டக்கூடிய சில பண்புகளைக் கொண்டிருந்தார்: உறுதியான நம்பிக்கை, திறமை, மற்றும் இனிமையான ஆளுமைத்தன்மை. நாம், "இதுதான் வழிநடத்துபவருக்குத் தேவையான எல்லாமுமாக உள்ளது" என்று கூறலாம். இது உண்மையா? யெரொ பெயாம் தான் கொண்டிருந்தவற்றைக் கொண்டு என்ன செய்தார் என்பதை நாம் கண்ணோக்குவோம்.

ஒரு நாள், யெரொபெயாம் எருசலேமுக்குச் சென்றுகொண்டிருந்த போது, தீர்க்கதரிசியான அகியா என்பவரைச் சந்தித்தார். அகியா தாம் போர்த்திக்கொண்டிருந்த புதுச்சால்வையைப் பிடித்து, நடக்க இருந்த விஷயத்தின் முன்னுரைப்பாக, அதைப் பன்னிரெண்டு துண்டாகக் கிழித்துப்போட்டார். அவர் யெரொபெயாமிடம் பின்வருமாறு கூறினார்:

பத்துத்துண்டுகளை எடுத்துக்கொள்;[1] இஸ்ரவேலின் தேவனாகிய

> *கர்த்தர் சொல்லுகிறது என்னவென்றால்: "இதோ, நான் ராஜ்ய பாரத்தைச் சாலொமோனுடைய கையிலிருந்து எடுத்துக் கிழித்து, உனக்குப் பத்துக்கோத்திரங்களைக் கொடுப்பேன்" (11:31).*

இரண்டு கோத்திரங்கள் தாவீதுக்காக வைக்கப்பட்டிருக்கும் (11:32), ஆனால் இந்தப் பிரிவினையைத் தேவன், இஸ்ரவேலின் விக்கிரகாராதனை யினிமித்தம் ஒரு வகையான நியாயத்தீர்ப்பாக அனுமதிப்பார். பின்வரு வதை நினைவில் வைத்துக்கொள்ளுங்கள்: எதுவும் தற்செயலாக நடப்பதில்லை. ஒன்று தேவன் அதை நடக்கும்படி அனுமதிக்கிறார் அல்லது அது நடைபெறச் செய்கிறார், ஆனால் எதுவும் தற்செயலாக நடப்பதில்லை. இந்த விஷயத்தில், தேவன் பிரிவினை நடைபெறும்படி அனுமதித்தார்.

யெரொபெயாம் ஒரு நாட்டை வழிநடத்தத் தமக்கு வாய்ப்பைப் பெற்றிருப்பார். ஒருவேளை அவர் ஒரு அரியணையைத் தமக்காக எப்போதும் விரும்பியிருக்கலாம். அவரது வெளிச்சமான நாள் வந்திருந்தது. அவருக்குத் தேவன் மிகுந்த செல்வாக்குள்ள பதவியைக் கொடுத்தார். அதை வைத்துக்கொண்டு அவர் என்ன செய்யவிருந்தார்?

யெரொபெயாமுக்கு, அகியாவினால் கூறப்பட்டது என்ன என்பதை சாலொமோன் கேள்விப்பட்டிருக்க வேண்டும், ஏனெனில் அவர் [சாலொமோன்] அவரை [யெரொபெயாமை] உடனடியாகக் கொலை செய்ய முயற்சித்தார். ஏதோ ஒருவகையில், யெரொபெயாம் சாலொமோனிடமிருந்து தப்பி எகிப்திற்குச் செல்ல முடிந்தது, அங்கு அவர் சீஷாக் என்ற அரசனிடம் அடைக்கலம் புகுந்தார். சாலொமோன் இறக்கும் வரையில் யெரொபெயாம் அங்கு பாதுகாப்பாக இருந்தார்.

சாலொமோனின் மரணத்திற்குப் பின்பு, அவரது மகனாகிய ரெகொ பெயாமுக்கு முடிசூட்ட, இஸ்ரவேல் ஜனங்கள் சீகேமில் ஒன்றுகூடினர். சாலொமோனின் மரணத்தைக் கேள்விப்பட்டிருந்த யெரொபெயாம், எகிப்தில் இருந்து வந்திருந்து, இஸ்ரவேல் மக்களுடன் சேர்ந்து, தங்கள் புதிய அரசர் ரெகொபெயாமிடம், மக்களின் பாரத்தைக் குறைக்கும்படி கேட்பதற்காக சீகேமிற்குச் சென்றார். ரெகொபெயாம் தமது பதிலைத் தருவதற்கு அவர்கள் மூன்று நாட்கள் காத்திருக்க வேண்டும் என்று கூறினார். அந்த மூன்று நாட்களின்போது, ரெகொபெயாம் என்ன செய்யலாம் என்பது பற்றி இஸ்ரவேலின் மூப்பர்களிடம் ஆலோசனை கேட்டார், அவர்கள் "அதைச் செய்யுங்கள். அவர்களின் சுமைகளைக் குறையுங்கள்" என்று கூறினர். பின்பு அவர் இளைஞர்களிடத்தில் பேசினார், அவர்கள், "கூடாது. இன்னும் பலமான வற்புறுத்துதலுக்கு அவர்கள் கீழ்ப்படியும்படி அவர்களைச் சவுக்கினால் அடியுங்கள். உமது சுண்டுவிரல் உமது தகப்பனாருடைய இடுப்பைப்பார்க்கிலும் பருமனாயிருக்கிறது. உமது தகப்பன் அவர்களைச் சவுக்குகளினாலே தண்டித்தார், நீர் அவர்களைத் தேள்களினாலே தண்டிப்பீராக" (12:11) என்று கூறினர். ரெகொபெயாம் அந்த இளைஞர்களின் ஆலோசனையை மதியீனமாய்ப் பின்பற்றினார். அவர் தமது முடிவை அறிவித்தபோது, அகியாவினால் முன்னுரைக்கப்

பட்டபடி ஒரு பிரிவினை ஏற்பட்டது. பதினோரு கோத்திரங்கள் யெரொபெயாமுடன் சென்றன, யூதா கோத்திரம் மட்டும் ரெகொபெயா முடன் தங்கியிருந்தது.

ரெகொபெயாமும் அவரது பகுதிவிசாரிப்புக்காரரான அதோராமும் விஷயத்தைச் சரிப்படுத்தவும், அரசர் யார் என்பதை மக்களுக்குக் காண் பிக்கவும், மற்ற கோத்திரங்களின் ஊர்களுக்குச் சென்றனர்; ஆனால் அதிருப்தியாளர்கள் அதோராமைக் கல்லெறிந்து கொன்றனர், மற்றும் ரெகொபெயாம் மயிரிழையில் உயிர்தப்பினார். ரெகொபெயாம் எருசலேமுக்குத் தப்பியோடி, அங்கு யூதா மற்றும் பென்யமீன்[2] கோத்திரங்களை யுத்தத்திற்கு ஒன்றுகூட்டினார். அவரால், யூதா மற்றும் பென்யமீன் கோத்திரங்களில் இருந்து 180,000 போர்வீரர்களைக் கூட்ட முடிந்தது. வடக்குக் கோத்திரங்களுடன் பேசி அவர்களைக் கீழ்ப்படுத்த இயலாவிட்டால், அவர்களைக் கீழ்ப்படியச் செய்வதற்கு, அவர் அவர்களை அடிப்பார். அவர்களுக்கு அவரால் கட்டளையிட இயலாவிட்டால், அவர் அவர்களைப் பயமுறுத்திக் கீழ்ப்படியச் செய்வார். பேச்சு தோல்வி யடைகிறபோது, மக்களில் சிலர் பட்டயத்தைப் பயன்படுத்த முடிவு செய்கின்றனர்.

செமாயா என்ற தீர்க்கதரிசி, கர்த்தரிடத்தில் இருந்து ஒரு செய்தியைக் கொடுப்பதற்காக ரெகொபெயாமிடம் அனுப்பப்பட்டார்: "நீங்கள் போகா மலும், உங்கள் சகோதரரோடு யுத்தம்பண்ணாமலும், அவரவர் தம்தம் வீட்டுக்குத் திரும்புங்கள்; என்னாலே இந்தக் காரியம் நடந்தது என்று கர்த்தர் உரைக்கிறார்; ..." (2 நாளாகமம் 11:4). தேவன் தமது நோக்கங்களை நிறைவேற்றுவதற்காக இந்தப் பிரிவினையைப் பயன்படுத்தினார். செமா யாவின் வார்த்தைகள், பிரிவினை தேவனுடைய சித்தமாய் இருந்தது என்று அர்த்தப்படுவதில்லை. பாவத்தினால் பிரிவினை ஏற்பட்டது, ஆனால் அகியாவின் மூலமாகத் தேவன் கொடுத்திருந்த தீர்க்கதரிசனத்தை அவர் [தேவன்] நிறைவேற்றினார் (2 நாளாகமம் 10:15). ரெகொபெயாம், செமா யாவின் வார்த்தைகளுக்குக் கீழ்ப்படிந்து தமது படைகளை வீடுகளுக்கு அனுப்பிவைத்தார்.

பிரிவினை முடிவாயிற்று. அதுமுதற்கொண்டு, இஸ்ரவேல் நாடு இரண்டு அரசர்களையும் இரண்டு அரசாங்கங்களையும் கொண்டிருக்கும். பதினோரு கோத்திரங்கள் தங்கள் புதிய அரசாங்கத்திற்குப் புதிய அரசரைத் தேர்வு செய்ய ஒன்றுகூடின. அவர்களின் தேர்வு ஏகமனதாக இருந்தது: யெரொபெயாம்.

> யெரொபெயாம் திரும்பிவந்தான் என்று இஸ்ரவேலருக்கெல்லாம் கேள்வியானபோது, அவனைச் சபையினிடத்தில் அழைத்தனுப்பி, அவனைச் சமஸ்த இஸ்ரவேலின்மேலும் ராஜாவாக்கினார்கள்; யூதா கோத்திரம்மாத்திரமேயன்றி வேறொருவரும் தாவீதின் வம்சத்தைப் பின்பற்றவில்லை (12:20).

இப்போது யெரொபெயாம், பெரும்விருப்பத்தைத் தூண்டக்கூடிய பதவியொன்றில் இருந்தார். யெரொபெயாம் எவ்வகையான அரசராய்

*இருப்பார்? இந்த நடத்துனரிடத்தில் இருந்து நாம் கற்றுக்கொள்ளக்கூடியது என்ன? யெரொபெயாம் திறமை, பிறரை ஆட்படுத்தும் வலிமையுள்ள தனிமனிதப்பண்பு, மற்றும் உறுதியான நம்பிக்கை ஆகியவற்றைக் கொண்டிருந்தார், ஆனால் அவர், நல்ல நடத்துவத்திற்கு இன்றியமை யாததாக உள்ள - நேர்மை என்ற - பண்பில் குறைவுபட்டிருந்தார் என்பதை நாம் காண்போம்.*

*இஸ்ரவேல் மனிதர்களின் தெரிவினால் சீகேமில் ஆட்சியைத் தொடங்கிய பின்பு (12:20), அவர் சீகேம் மற்றும் பெனுவேல் ஆகிய இடங்களைக் கோட்டைகளாக்கி, தமது இரு தலைநகரங்களாக்கினார், இவற்றில் ஒன்று யோர்தானுக்கு மேற்கிலும் இன்னொன்று யோர்தானுக்கு கிழக்கிலும் இருந்தன (12:25). அவர் திர்சா என்ற அழகிய நகரத்தில் தமது சொந்த வாசஸ்தலத்தை நிறுவினார் (14:17). அவருக்கு, தேவனுடைய நியாயப்பிரமாணத்திற்குக் கீழ்ப்படிவதால், அவரது அரசாங்கத்தையும் அவரது வம்சத்தையும் நிலைநாட்டச் செய்தல் என்ற வெகுமதி கிடைக்கும் என்று உறுதியளிக்கப்பட்டது. அவர் என்ன செய்ய வேண்டும் என்று தேவன் விரும்புகின்றார் என்பது அகிசாவின் மூலம் உரைக்கப்பட்டது:*

> *நான் உனக்குக் கட்டளையிட்டதையெல்லாம் நீ கேட்டுக் கைக் கொண்டு, நீ என் வழிகளில் நடந்து, என் தாசனாகிய தாவீது செய்ததுபோல, என் கட்டளைகளையும் என் கற்பனைகளையும் கைக்கொள்ளும்படிக்கு என் பார்வைக்குச் செம்மையானதைச் செய்கிறதுண்டானால், நான் உன்னோடிருந்து, நான் தாவீதுக்குக் கட்டினதுபோல உனக்கும் நிலையான வீட்டைக் கட்டி இஸ்ரவேலை உனக்குத் தருவேன் (11:38).*

*யெரொபெயாம் என்ன செய்தார்? அவர் தேவனுடைய தீர்க்கதரிசி கூறியதைக் கவனித்தாரா? இல்லை. அவர் உடனடியாக இஸ்ரவேலரைப் பாவத்திற்குள் வழிநடத்தினார். அவர் விரைவிலேயே, தாம் எல்லா வற்றையும் கொண்டிருந்ததையும், ஆனால் தேவனால் அங்கீரிக்கப்பட்ட ஒருவர் கொண்டிருக்க வேண்டிய ஒன்றை - ஒரு மனிதர் தம்மைப் பின்பற்றுபவர்களைத் தேவனுடைய கட்டளைகளின்படி நடப்பதற்கு வழிநடத்தத்தூண்டும் இருதயத்தை கொண்டிராததையும் வெளிப் படுத்தினார்.*

## முடிவுரை

*யெரொபெயாம், "இஸ்ரவேலர் பாவம் செய்வதற்குக் காரணமா னான்" என்பது ஏதாவது ஒரு வடிவத்தில், இருபத்தி ஐந்து முறைகள் பழைய ஏற்பாட்டில் கூறப்பட்டுள்ளது. W. கிரஹாம் ஸ்கிரோஜி என்பவர் பின்வருமாறு எழுதினார்:*

> *ஒரு மனிதர் பாவம் செய்வதில் உறுதியாய்த் தொடர்ந்து நிலைத்திருந்து, மற்றவர்களையும் பாவம் செய்யத் தூண்டினார் என்பதே அவரைப் பற்றிக் கூறப்படக்கூடிய மிகமோசமான விஷயமாய் இருக்கிறது;*

*“நேபாத்தின் குமாரனான யெரொபெயாம்” பற்றி இருபத்து ஐந்து முறை இவ்வாறு கூறப்பட்டுள்ளது. இவரைப்போன்று மிகநேர்த்தியான வாய்ப்பைக் கொண்டிருந்தவரோ, அல்லது அதை இவரைப் போல் துன்மார்க்கத்தில் வீசியெறிந்தவரோ வேறெவரும் இல்லை. தேவன் கட்டளையிட்ட யாவற்றையும் கைக்கொண்டு அவரது வழிகளில் நடந்து, அவரது பார்வைக்குச் சரியானவற்றைச் செய்தால், தேவன் அவருடன் இருப்பார் என்றும், தாவீதுக்குச் செய்தது போலவே அவருக்கும் ஒரு நிலையான வீட்டைக் கட்டுவார் என்றும், இஸ்ரவேல் மக்களை அவருக்குத் தருவார் என்றும் யெரொபெயாமுக்கு கூறப்பட்டிருந்தது (1 இராஜாக்கள் 11:38). இதைக் காட்டிலும் அதிகமான வேறு எவற்றை ஒரு மனிதர் விரும்பக்கூடும்? இருப்பினும், யெரொபெயாம் வேண்டுமென்றே விடாப்பிடியாக பாவம் செய்து மற்றும் இஸ்ரவேல் மக்களைப் பாவம் செய்ய வைத்தல் ஆகியவற்றினால் அதைத் தூக்கியெறிந்தார்.*[3]

*யெரொபெயாம் தம்மையே, “நான் இஸ்ரவேல் மக்களை எங்கே செல்லும்படி வழிநடத்திக்கொண்டிருக்கின்றேன்?” என்று கேட்டிருந்தால், அவர் “நான் இந்த மக்களினத்தை, அழிவின் மிகமோசமான வகைக்குள், ஆவிக்குரிய அழிவிற்குள் வழிநடத்திக்கொண்டிருக்கின்றேன்” என்று பதில் அளித்திருப்பார். உறுதியான நம்பிக்கை, திறமை, மற்றும் பிறரை ஆட்படுத்தும் ஆளுமைத்தன்மை ஆகியவை, சுயநலத்திலும் ஆசீர்வாதத்திற்குப் பதில் அழிவில் கொண்டுசேர்க்கும் அடிவைப்புகளிலும் வீணாக்கப்பட்டால், நீண்ட ஓட்டத்தில் அவை ஒன்றுக்கும் உள்ளது.*

***கற்க வேண்டிய பாடம்:***
***அரண்மனையில் வாழ்வதைக் காட்டிலும் நேர்மையும் தாழ்மையும் உள்ள இருதயத்தைக் கொண்டிருத்தல் மிக மேன்மையானது.***

---

*குறிப்புகள்*

*[1]இவ்விடத்தில், இரு கோத்திரங்கள் தெற்கு ராஜ்யத்தில் இருக்கும் என்பதற்கான முதல் குறிப்பு நமக்கு தரப்படுகிறது. உண்மையான பிரிவில், பதினோரு கோத்திரங்கள் புறம்பே இழுக்கப்பட்டதாகக் காணப்படுகிறது, ஆனால் பிற்பாடு பென்யமீன் கோத்திரத்தார் திரும்பி வந்து யூதாவுடன் நின்றனர். [2]பென்யமீன் கோத்திரத்தார் யூதாவுடன் நிற்பதற்குத் திரும்பி வந்தனர் என்பது உறுதி. ஒருவேளை, பென்யமீன் கோத்திரத்தார், பிரிவினைக்குப் பின்பு யெரொபெயாமுடன் செல்லுதல் பற்றி இரண்டாம் முறை சிந்தித்துப்பார்த்தபின்பு, யூதாவுடன் ஒப்புரவாகியிருக்கலாம்.* [3]W. Graham Scroggie, *The Unfolding Drama of Redemption* (Grand Rapids, Mich.: Zondervan Publishing House, 1976), 299.